## 28.34 உயர்நிலைக் குழு அறிக்கை – பள்ளிக் கல்வித் துறை பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

பள்ளிக் கல்வித் துறை

அரசாணை (நிலை) எண்.208 நாள் : 6.7.1999

படிக்க :

ஊரக வளர்ச்சித் துறை நேர்முக கடித எண்.14532/சி4/99, நாள் 11.5.99.

**ஆணை**

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994ன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கல்வித் துறையிலிருந்து சில அதிகாரங்கள் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது குறித்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் மீது அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டவாறு கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

அ) தொடக்கக் கல்வி பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக தொடக்க கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கிராம ஊராட்சி தலைவர்கள் ஒத்துழைப்பு நல்கலாம்.

ஆ) புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவது நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துவது குறித்து கிராம ஊராட்சித் தலைவர்கள் பரிந்துரைகள் செய்யலாம்.

இ) பள்ளிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு கிராம ஊராட்சிகள் பலவகையிலும் உதவியாகச் செயல்படலாம்.

ஈ) பள்ளியின் கல்வித் திறனை ஆய்வு செய்தல், கல்விக் குழு அமைத்தல் போன்ற உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பங்கு பெறலாம். ஆனால் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அரசிடமே இருக்கும்.

உ) பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு விழிப்புணர்ச்சி முகாம்கள் மற்றும் இதரப் பணிகளில் தொடக்கக் கல்வித் துறை களப்பணி அலுவலர்களுடன் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஒருங்கிணைந்து செயல்படலாம்.

ஊ) பள்ளி நடவடிக்கைகளை கவனிக்க கல்விக் குழு அமைக்கும் பணியில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஈடுபடலாம். ஆனால் அக்குழு தெரிவிக்கும் புகார் அல்லது குறைபாடு குறித்து கல்வித் துறை அதிகாரிகள் மூலமே நடவடிக்கை எடுக்கப்படும்.

எ) தொடக்கக் கல்வி மேம்பாட்டிற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல் அதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் ஆகியவற்றில் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பங்கு பெறலாம்.

ஏ) அரசால் நியமனம் செய்யப்படும் தொடக்கக்கல்வி ஆசிரியர்களின் செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை அதிகாரிகளுக்கு, உரிய நடவடிக்கைக்காக தெரிவிக்கலாம்.

2. மேற்படி ஆணையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு தொடக்கக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.ஏ.கௌரி சங்கர்**

அரசு செயலாளர்